(ஆ) மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. மானியக் கோரிக்கைகள், 1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989-90-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள்—என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 5,24,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் ஒரு அனல் மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 5,24,24,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்",